## பேச்சு – பிரிவு 5

# பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர்

செம்மொழியாம் எம்மொழியைத் தேசமெல்லாம் வளர்த்தவர் முத்தமிழ் அறிஞர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர். அவர் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் முதற்தமிழ்ப் பேராசிரியராகப் பதவிவகித்த பெருமைக்குரியவர். பாடசாலை ஆசிரியராக, அதிபராக, பத்திரிகைஆசிரியராக, திறனைய்வாளராக ஆராய்ச்சியாளராக, கலைச்சொல்லாக்க குழுவின் தலைவராகப் பல பதவிகளை வகித்து மேதினியில் எம் தமிழ்மொழியை மேன்மையுறச் செய்தவர்.

பன்மொழிப் புலமைமிக்க பேராசிரியர் விபுலாநந்தர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர், இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப்பட்டம் பெற்றவர், சிறந்த தலைமைத்துவப் பண்பும், நிர்வாகத்திறனும் இயல்பாகவே அமையப்பெற்ற பேராசிரியரை பல்வேறு பதவிகள் தமிழ் நாட்டில் இருந்தும், இலங்கையில் இருந்தும் தேடிவந்தன.

தமிழ்நாடு சிதம்பரத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமா என்பது பற்றி ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுமுன், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பாக கருத்துக்களை முன்வைத்து உரையாற்றுவதற்காக 1927ம் ஆண்டு பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் அழைக்கப்பட்டார். அப்போது சுவாமிகள் இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை நிர்வகித்துக்கொண்டிருந்தார்.

விசாரணைக்குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்மலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் உருவாவதற்கு முக்கியமானவராகத் திகழ்ந்த சேர். அண்ணாமலைச் செட்டியார் கேட்டுக்கொண்டதற்கமைய சுவாமி விபுலாநந்தர் 1931ம் ஆண்டு பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் தமிழ்நாட்டின் முதற் தமிழ் பேராசிரியர் என்ற பெருமையை அடிகளார் பெற்றுக்கொண்டார். இக்கால கட்டத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1941ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் தரமுயர்த்தப்பட்டது. அவ்வேளை பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளை ஏற்று தமிழ்த்துறையின் முதற் தமிழ் பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் தமிழகத்திலும், இலங்கையிலும் முதற் தமிழ் பேராசிரியர் என்ற பெருமைக்குரியவராகப் போற்றப்படுகின்றார். 1943ம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகள் பேராசியராகப் பணியாற்றும் போது பல புதிய கற்கைநெறிகளை ஆரம்பித்துவைத்தார். தமிழ் முதுமானிப் பட்டப்படிப்பு, தமிழ் வித்துவான் கற்கைநெறி, சிங்கள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான தமிழ் வகுப்புக்கள் முதலானவற்றை தொடங்கி வைத்தார்.

பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை, வித்துவான் கற்கை நெறிகளை பயின்ற மாணவர்களுக்கு தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திராவிடப்பண்பாடு, காப்பிய இலக்கியங்களைப் போதித்து பல கல்விமான்களையும், பேராசிரியர் பரம்பரையை உருவாக்கிய பெருமைக்குரியவர் பேராசிரியர் விபுலாநந்தர். சுவாமி விபுலாநந்தர் பேராசிரியராக இருந்து ஆற்றிய தமிழ்ப்பணியைப் பேசுகின்ற வேளை என் நெஞ்சு பூரிக்கின்றது, தன் தமிழ்த்தொண்டால் தமிழ் மொழியையும், தமிழ்ச்சமூகத்தையும் மேதினியில் மேன்மையுறச் செய்த பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் நாமம் தமிழ்மொழி உள்ளவரை நிலைக்குமென்பது திண்ணம்.

நன்றி, வணக்கம்